# ஜீவநதி

தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி (வெளி. 22:1)

DECEMBER 2023

இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர்
உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.
லூக்கா 2:11



SHARJAH TAMIL CONGREGATION (CSI KANYAKUMARI DIOCESE)

Private circulation only.

# ஷார்ஜா தமிழ் கான்கிரிகேஷன்

தென்னிந்தியத் திருச்சபை - கன்னியாகுமரிப் பேராயம்

# ஜீவநதி

டிசம்பர் 2023 - இதழ் 196

**நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.**

(ஏசாயா 9:6)

## SHARJAH TAMIL CONGREGATION

**(CSI KANYAKUMARI DIOCESE)**

**P.O.Box : 46121, Sharjah, U.A.E. Tel. / Fax : 06-5680727, Mobile : 050-9367576**

**For private circulation only**

# அனுதின மன்னா

**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம் 119:105)**

| தேதி | நாள் | காலை | மனன வசனம் | | மாலை |
|---|---|---|---|---|---|
| | | தீத்து பிலேமோன் எபிரெயர் | | | சங்கீதம் |
| 1 | வெள் | 1:1-9 | ஏற்றகாலங்களிலே ... வெளிப்படுத்தினார் | 1:4 | 46:1-11 |
| 2 | சனி | 1:5-9 | குற்றஞ்சாட்டப்படாதவனும் ... ஏற்படுத்தலாம் | 1:6 | 47:1-9 |
| 3 | ஞா | 1:10-16 | விசுவாசத்திலே ... கடிந்துகொள் | 1:14 | 48:1-14 |
| 4 | திங் | 2:1-5 | முதிர்வயதுள்ள ... புத்திசொல்லு | 2:2 | 49:1-10 |
| 5 | செவ் | 2:6-10 | நீயே ... காண்பித்து | 2:7 | 49:11-20 |
| 6 | புத | 2:11-15 | அவர் ... ஒப்புக்கொடுத்தார் | 2:14 | 50:1-10 |
| 7 | வியா | 3:1-8 | ஏனெனில் ... பகைக்கிறவர்களுமாயிருந்தோம் | 3:3 | 50:11-23 |
| 8 | வெள் | 3:9-15 | வேதப்புரட்டனாயிருக்கிற ... விலகு | 3:10 | 51:1-10 |
| 9 | சனி | 1:1-7 | சகோதரனே ... அடைந்திருக்கிறோம் | 1:7 | 51:11-19 |
| 10 | ஞா | 1:8-16 | ஆனாலும் ... மனதில்லை | 1:14 | 52:1-9 |
| 11 | திங் | 1:17-25 | அவன் ... வைத்துக்கொள்ளும் | 1:18 | 53:1-6 |
| 12 | செவ் | 1:1-8 | எப்படியெனில் ... சொன்னதுண்டா? | 1:5 | 54:1-7 |
| 13 | புத | 1:9-14 | மேலும் ... சொன்னதுண்டா? | 1:13 | 55:1-10 |
| 14 | வியா | 2:1-4 | ஆகையால் ... கவனிக்கவேண்டும் | 2:1 | 55:11-23 |
| 15 | வெள் | 2:5-10 | அவனை ... என்று சொன்னான் | 2:7 | 56:1-13 |
| 16 | சனி | 2:11-18 | ஆதலால் ... வல்லவராயிருக்கிறார் | 2:18 | 57:1-11 |
| 17 | ஞா | 3:1-6 | ஏனெனில் ... தேவன் | 3: 4 | 58:1-11 |
| 18 | திங் | 3:7-11 | அங்கே ... கண்டார்கள் | 3:9 | 59:1-10 |
| 19 | செவ் | 3:12-19 | நாம் ... பங்குள்ளவர்களாயிருப்போம் | 3:14 | 59:11-17 |
| 20 | புத | 4:1-5 | ஏனெனில் ... பிரயோஜனப்படவில்லை | 4:2 | 60:1-12 |
| 21 | வியா | 4:6-13 | ஏனெனில் ... ஓய்ந்திருப்பான் | 4:10 | 61:1-8 |
| 22 | வெள் | 4:14-16 | நம்முடைய ... நமக்கிருக்கிறார் | 4:15 | 62:1-12 |
| 23 | சனி | 5:1-10 | மேலும் ... ஏற்படுகிறதில்லை | 5:4 | 63:1-11 |
| 24 | ஞா | 5:11-14 | பலமான ... தரும் | 5:14 | 64:1-10 |
| 25 | திங் | 6:1-6 | ஆகையால் ... விசுவாசம் | 6:1 | 65:1-13 |
| 26 | செவ் | 6:7-12 | உங்களுக்கு ... ஆசையாயிருக்கிறோம் | 6:12 | 66:1-10 |
| 27 | புத | 6:13-20 | நமக்கு ... பிரவேசித்திருக்கிறார் | 6:20 | 66:11-20 |
| 28 | வியா | 7:1-5 | இந்த ... ஆசீர்வதித்தான் | 7:1 | 67:1-7 |
| 29 | வெள் | 7:6-14 | நம்முடைய ... சொல்லவில்லையே | 7:14 | 68:1-10 |
| 30 | சனி | 7:15-22 | நீர் ... ஆசாரியரானார் | 7:17 | 68:11-20 |
| 31 | ஞாயி | 7:23-28 | மேலும் ... வல்லவராயுமிருக்கிறார் | 7:25 | 68:21-35 |

# ஆயரிடமிருந்து…

கிறிஸ்து இயேசுவில் மிகவும் பிரியமானவர்களே,

நித்தமும் நன்மைகளால் நம்மை நிறைத்து, நல்வழியில் நடத்தி, ஆசீர்வதித்து வருகின்ற நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் இறைமக்கள் அனைவருக்கும் டிசம்பர் மாதத்தின் நல்வாழ்த்துதலையும், கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துதலையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வருடத்தின் நிறைவு மாதத்திலும் நம்மை அழைத்து வந்திருக்கிற ஆண்டவரை நன்றியோடு போற்றுகிறேன். கடந்து வந்த நாட்களில் இறைவன் நம் வாழ்வில் செய்த அனைத்து நன்மைகளையும் எண்ணி அவருக்கு நன்றி செலுத்துவோம். புதிய ஆண்டிற்குள் அடியெடுத்து வைக்க நம்மை ஆயத்தப்படுத்துவோம்.

கடந்த மாதத்தில் நடைபெற்ற World Sunday School Day சிறப்புத் தொழுகையை அலங்கரித்துத் தந்த நமது Junior Church பிள்ளைகள், ஆசிரியர்களை வாழ்த்துகிறேன். மேலும் Junior Church Exam, போட்டிகள், Women’s Fellowship Exam இவைகளில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதம் 3-ம் தேதி நடைபெற இருக்கின்ற கிறிஸ்து பிறப்பு சிறப்பு நிகழ்வுகளிலும் அனைவரும் கலந்து சிறப்பிக்க உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வருடத்தின் நிறைவு மாதத்தில் வைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே கடந்த கால கசப்பான அனுபவங்களை நாம் மறந்துவிடுவது நல்லது. நினைவில் வைத்திருப்போமானால் வஞ்சம், கோபம், எரிச்சல் போன்ற எதிர்விளைவுகளை உருவாக்கும் உணர்வுகள் நம்முள் ஏற்படும். இந்த உணர்வுகளை நெஞ்சில் தேக்குவதால் பிறரை காயப்படுத்தும் வார்த்தைகளை பேசுகிறோம். மற்றவர்களைப் பழிவாங்கத் துடிக்கிறோம். முடிவில் நம்மையே நாம் அழித்துவிடுவோம். எனவே நல்ல அனுபவங்களையும், நல்ல உணர்வுகளையும் நம் எண்ணத்தில் நிறைத்து மகிழ்ச்சியாய் வாழ்வோம்.

இயேசுநாதர் நம்மை நேசித்து, இவ்வுலகில் பாலனாய் பிறந்து, நம்மை மீட்டுக் கொண்டார். அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியைத் தரவே வந்தார். கிறிஸ்து பிறப்பைக் கொண்டாட ஆயத்தப்படுகிற நாமும் **‘நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்’** என்ற மகிழ்ச்சியைப் பகிருவோம். பண்டிகை நாட்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாய் அமையட்டும்.

இறை ஆசி நம் அனைவரோடும் தங்கி இருப்பதாக. **ஆமென்.**

கிறிஸ்துவின் திருப்பணியில்,
**Rev. S. சுஜின் பிரிட்டோ,**
சபை ஆயர் மற்றும் குடும்பம்.

# அருளுரைப்பகுதி

## அரசராய் வரும் ஆண்டவர்

**திருமறைப் பகுதி:** மத்தேயு 2:1-11 **தியான வசனம்:** மத்தேயு 2:5

***யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல, என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று, தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது என்றார்கள்.***

இயேசுகிறிஸ்துவின் பிறப்பு திடீரென யாரும் எதிர்பாராத நிலையில் நிகழ்ந்த நிகழ்வல்ல. பல நூறு ஆண்டுகளுக்கு முன்னே, இறைவாக்கினர்களால் முன்னுரைக்கப்பட்டு, வான சாஸ்திரிகளால் எழுதி வைக்கப்பட்டு, உலக மக்கள் அனைவராலும் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வு.

கிறிஸ்துவின் பிறப்பின் அதிசயத்தை இறைவாக்கினர்கள் வெவ்வேறு விதமாக முன்னுரைத்தனர். மீகா இறைவாக்கினர், மீகா 5:2-ல் ***'இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார்'*** எனக்கூறுகிறார்.

அக்கால அரசர்களின் ஆட்சி, மக்களுக்கு திருப்தியாக இருக்கவில்லை. ஒவ்வொரு அரசரின் முடிசூட்டு விழாவின் போதும் மேசியா என்றே மக்கள் அவரை நினைத்தனர். எனவே இயேசுகிறிஸ்து அரசராய் வருவார், மக்களின் துன்பங்களைப் போக்குவார் எனக் கூறப்பட்டது. கிறிஸ்துவின் பிறப்பின் நிலை என்ன?

1. **அவமானப்படுத்த மனதில்லாத யோசேப்பு:**
   ***அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளை தள்ளிவிட யோசனையாயிருந்தான். (மத்தேயு 1:19)***

யோசேப்பு யாரை அவமானப்படுத்த மனதில்லாதிருந்தார் என்றால், தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்ட மரியாளை. காரணம் மரியாள் திருமண நிச்சயம் மட்டும் செய்யப்பட்டவள், ஆனால் கருவுற்றிருந்தாள். இந்நிலை யோசேப்புக்கு தெரிந்திருந்தது. எனினும் மரியாளை அவமானப்படுத்தாமல் இரகசியமாய் தள்ளிவிட நினைத்தார்.

***யோசேப்பு எப்படிப்பட்டவர், அவரது சிறப்பு என்ன?***

1. அவர் திருச்சட்டத்தை நுணுக்கமாய் கடைப்பிடிப்பவர்
2. அவர் நீதிமான்
3. அவர் இரக்க குணமுள்ளவர்

உபாகமம் சட்டப்படி மரியாள் கல்லால் எறியப்பட்டு சாகவேண்டும் (உபா.22:20,21). இதைத்தான் யோசேப்பு செய்திருக்கவேண்டும். ஆனால் யோசேப்பு தண்டனை ஒன்றும் கொடுக்காமல் யாரும் அறியாத முறையில் மரியாளை விட்டு விலகிச் செல்ல முயன்றார். அப்பொழுது ஆண்டவரின் வார்த்தை, மத். 1:20-ல் ***'யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே, அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது'*** என்று கூறியது.

இம்மானுவேலராம் இயேசுவை உலகிற்கு வெளிப்படுத்துவதில் பல போராட்டங்கள் இருந்தன. எத்தகைய போராட்ட நிலையிலும் யோசேப்பு நிதானமாய் செயல்பட்டார்.

**2. அறிந்து வந்த சாஸ்திரிகள்:**

***யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம் என்றார்கள். (மத்தேயு 2:2)***

சாஸ்திரிகள் எதை அறிந்து வந்தார்கள், இயேசுவின் பிறப்பை அறிந்து வந்தனர். காரணம் வானத்தில் ஓர் நட்சத்திரம் தோன்றியது. அது அதிசய நட்சத்திரம். யூதருக்கு ராஜா பிறந்திருக்கிறார் என அறிந்த சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்தனர்.

***சாஸ்திரிகள் எப்படிப்பட்டவர்கள்? இவர்கள்***

1. கனவு காட்சிகளுக்கு விளக்கம் தருபவர்கள்
2. ஒட்டகத்தில் பயணம் செய்தவர்கள்
3. வானத்தையே பார்த்துக்கொண்டிருப்பவர்கள்
4. அறிவுலகம் வானவியல் தந்தை என இவர்களை அழைத்தது
5. இவர்கள் மிகப் பெரிய ஞானிகள்

ஏன் இவர்கள் எருசலேமில் ராஜாவாம் இயேசு குழந்தையைத் தேடினார்கள்.

இஸ்ரவேல் மக்களின் வாழ்வு முறை எருசலேம் நகரையே சுற்றி இருந்தது. அரண்சூழ் நகரமாக, இறைவன் வாழும் இடமாக, இறைவனை வழிபட ஏற்ற இடமாக எருசலேம் விளங்கியது. எனவே புகழ்பெற்ற இடமான எருசலேமுக்கு சாஸ்திரிகள் வந்தனர்.

அரசரை மாடமாளிகையில் தேடிய சாஸ்திரிகள் முன்னணையிலே கண்டார்கள். தங்களை முழுமையாய் தாழ்த்தி, தாங்கள் கொண்டு சென்ற பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளைப் போளத்தையும் காணிக்கையாகப் படைத்தனர். அரசரைத் தேடிய சாஸ்திரிகள், தங்களை இயேசுவுக்கு முன்பாக முழுமையாய் தாழ்த்தினர்.

**3. அதிர்ந்துபோன ஏரோது:**

***ஏரோது ராஜா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனோடேகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள். (மத்தேயு 2:3)***

யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? என்று சாஸ்திரிகள் கேட்டபோது ஏரோது ஆடிப்போனார். யூதருக்கு ராஜாவாக தான் இருந்து கொண்டிருக்க, வேறொரு ராஜாவா என அதிவேகம் கொண்டார். ஆத்திரம் அடைந்தார்.

யூதருக்கு ராஜா தோன்றிய செய்தியைத் திட்டமாய் அறியும்படி பிரதான ஆசாரியர், வேதபாரகரிடம் ஆலோசனை கேட்டார். இயேசு பெத்லகேமில் பிறப்பார் என உறுதி செய்தார். ஆத்திரமடைந்த ஏரோது இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்று போட கட்டளையிட்டார். **இந்த ஏரோது யார்?**

1. யூதாயாவின் தேசாதிபதிகளில் ஒருவர்
2. ரோமருக்கு வரிப்பணம் பிரித்துக் கொடுத்தவர்
3. மக்களைப் பிரியப்படுத்த அநேக கட்டிடங்களைக் கட்டினார்
4. ஆண்டவருக்கு ஒரு ஆலயத்தையும் கட்டினார்.
5. இவரே மகா ஏரோது.

ஏரோது தானும் பிள்ளையைக் காணவேண்டும் என்ற போலி ஆசையை வெளிப்படுத்தினார். ஆண்டவர் ஏரோதின் சதித்திட்டத்தை சாஸ்திரிகளுக்கும், யோசேப்புக்கும் அறிவித்தார்.

தன்னாட்சி, சிற்றின்பங்களுக்காக பிறரை அழிக்கும் முயற்சி உடையவர் ஏரோது. நம்மை நேசித்து இவ்வுலகம் வந்து பாலனாய் பிறந்த இயேசுவைப்போல, பிறரை நேசித்து அன்பை வெளிப்படுத்துவோம்.

இறை ஆசி நம் அனைவரோடும் தங்கி இருப்பதாக. ஆமென்.

**Rev. S. சுஜின் பிரிட்டோ,**
சபை ஆயர்

# செயலர் மடல்

*“தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள், இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.”(லூக்கா 2:10)*

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நமக்காகப் பாலனாகப் பிறந்து நம்மைத் தம் சொந்த ஜனமாகத் தெரிந்தெடுத்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் திருச்சபையின் விசுவாசிகள் யாவருக்கும் சபைக்குழுவின் சார்பில் சந்தோஷமான கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள். கடந்த மாதங்களில் நம்மையும், திருச்சபையின் ஊழியங்களையும் ஆசீர்வதித்து வழிநடத்திய நம் தேவனை நன்றியோடு துதிப்போம்.

கடந்த மாதம் 12-ம் நாள் அகில உலக திருமறைப்பள்ளி தின சிறப்பு ஆராதனையை நமது திருச்சபையில் நடத்த கர்த்தர் கிருபை புரிந்தார். இந்த ஆராதனையை முழுமையாக ஜூனியர் சர்ச் பிள்ளைகள் மற்றும் ஆசிரியர்கள் நடத்தியதும், ஆண்டவரது வசனத்தை ஜூனியர் சர்ச் மாணவர் A.S.Akshel Hans கொடுத்ததும் மிக ஆசீர்வாதமாய் அமைந்தது. ஆராதனை மிக ஆசீர்வாதமாய் அமைந்திட ஜெபித்து நல் ஆலோசனைகள் கொடுத்த ஆயர் அவர்களுக்கும், ஆயருடன் இணைந்து இவ்வாராதனையை ஆயத்தம் செய்த ஜூனியர் சர்ச் இயக்குநர் Mrs.Blessy Ruskin மற்றும் ஆசிரியைகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை கூறிக்கொள்ளுகிறேன்.

நமது திருச்சபையின் இவ்வருட கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்வுகள் 03-12-2023 அன்று மாலை 4:00 மணிக்கு Habitat Private School, Al Jurf, Ajman-ல் வைத்து நடைபெற இருக்கிறது. கிறிஸ்மஸ் ஆராதனை 25-ம் நாள் காலை 6:00 மணிக்கும், புதுவருட ஆராதனை காலை 7:00 மணிக்கும் வழக்கம்போல் நாம் தொழுகை செய்கின்ற ஆலய வளாகத்தில் வைத்து நடைபெறும். அனைத்து ஆராதனைகளிலும், ஏனைய நிகழ்வுகளிலும் உற்சாகமாய் பங்கேற்கவும், அநேகரை கலந்துகொள்ளச் செய்யவும் கேட்டுக்கொள்கிறேன். நடைபெற்று வரும் கேம்ப் ஊழியங்களில் உற்சாகமாய் பங்கேற்று சிறப்பிக்கவும் அன்புடன் வேண்டுகிறேன்.

இவ்வருட கிறிஸ்மஸ் மற்றும் நமது சபையின் ஏனைய ஊழியங்கள் அனைத்தும் யாவருக்கும் பயனுள்ளதாக அமைந்திடவும், நம்மில் குடும்பமாகவும், தனியாகவும் பண்டிகையை ஆசரிக்க நம் சொந்த தேசம் சென்றுவர இருப்பவர்களின் பயணங்களுக்காகவும் ஜெபிப்போம்.

இவ்வாண்டின் துவக்கம் முதல் இதுவரை நம்மைப் பாதுகாத்து அனைத்து ஆசிகளாலும் நம்மை வழிநடத்திய ஆண்டவரைப் போற்றுவோம். தொடர்ந்து பாதத்தில் காத்திருந்து புதிய ஆண்டின் ஆசிகளை அனுபவமாக்குவோம்.

சபைக்குழு சார்பில்,
**K. அருண்குமார்.**
செயலாளர்

# பெண்கள் பகுதி

## பிள்ளைக்காக அழுத 'ராகேல்'

ரெபேக்காளின் சகோதரனான லாபானின் இரண்டாவது மகள் ராகேல். ராகேல் என்ற பெயருக்கு 'பெண் செம்மறி ஆடு' என்பது பொருள். அவள் ரூபவதியும், பார்வைக்கு அழகானவளுமாயிருந்தாள். தன் சகோதரனாகிய ஏசாவின் ஆசீர்வாதத்தை ஏமாற்றிப் பெற்றுக்கொண்ட யாக்கோபு, ஏசா தன்னைக் கொலை செய்துவிடுவான் என்று பயந்தான். தன் தாயின் சொற்படி ஓடிவந்து லாபானிடம் தஞ்சம் புகுந்தான். அந்த அந்நிய தேசமான பதான் அராமில் அவன் முதன்முதலில் சந்தித்த உறவு ராகேல்தான். லாபான் யாக்கோபிடம், நீ என் மருமகனாய் இருப்பதினால் சும்மா எனக்கு வேலை செய்யலாமா? சம்பளம் எவ்வளவு கேட்கிறாய், சொல் என்றான். யாக்கோபு , ராகேல் மேல் பிரியம் கொண்டு, உம்முடைய இளைய குமாரத்தியாகிய ராகேலுக்காக ஏழு வருடம் வேலை செய்கிறேன் என்றான்.

ராகேல் மேல் இருந்த பிரியத்தினாலே அந்த ஏழு வருடங்கள் அவனுக்கு கொஞ்ச நாட்களாகத் தோன்றியது. அந்த ஏழு வருடங்களின் இறுதியில் லேயாள் யாக்கோபுக்குக் கொடுக்கப்பட்டு ஏமாற்றப்பட்டான். ஆகவே ராகேலுக்காக இன்னும் ஏழு வருடங்கள் யாக்கோபு வேலை செய்ய வேண்டியிருந்தது. ராகேலின் வாழ்வு எப்படி அமைந்தது.

1. **பிரச்சனையை சரியாக அணுகாத ராகேல்:**

   திருமறையில் கூறப்படும் பிள்ளையில்லாத பெண்களின் வரிசையில் ராகேல் மூன்றாவது வருகிறாள். யாக்கோபு லேயாளைப் பார்க்கிலும், ராகேலை அதிகமாக நேசித்ததைக் கர்த்தர் கண்டு லேயாள் கர்ப்பந்தரிக்கும்படிக்கு செய்தார். ராகேலோ மலடியாயிருந்தாள். ராகேல் தான் யாக்கோபுக்கு பிள்ளைகளைப் பெறாததைக் கண்டு தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டு, யாக்கோபை நோக்கி, 'எனக்கு பிள்ளை கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன்' என்றாள். தனக்குப் பிள்ளை பிறக்காததற்கான காரணத்தை ராகேல் புரிந்துகொள்ளவில்லை.

அதோடு நின்றுவிடாமல் ராகேல் தன் வேலைக்காரியைத் தன் கணவனுக்குக் கொடுத்தாள். அவளால் பிள்ளை கிடைத்தபோது, 'என் சகோதரியோடு நான் மகா போராட்டமாய்ப் போராடி மேற்கொண்டேன்' என்றாள். என் சகோதரியை ஆசீர்வதித்த ஆண்டவரே, என்னையும் ஆசீர்வதியும் என்று இறைவனிடம் கெஞ்சுவதற்குப் பதில், அவளது முயற்சிகள் சுயம் சார்ந்து இருந்தது.

வயல்வெளியிலிருந்து ரூபன், தூதாயீம் பழங்களைக் கொண்டுவந்தபோது, ராகேல் அதைச் சாப்பிட விரும்பினாள். ஏனெனில் அதைச் சாப்பிடுவதின் மூலம் அவள் கருத்தரிக்கமுடியும் என்று நம்பினாள். மூடநம்பிக்கையில் நம்பிக்கை வைத்த அவளுக்கு எல்லாவற்றிற்கும் மூலகாரணராகிய கர்த்தரிடம் நம்பிக்கை வைக்க தெரியவில்லை.

2. **பிரச்சனையை உருவாக்கிய ராகேல்:**

யாக்கோபு, பதான் அராமை விட்டு கானான் தேசத்திற்குத் தன் குடும்பத்தோடு புறப்பட்டபோது, ராகேல் தன் தந்தை லாபானின் சுரூபங்களைத் திருடிக்கொண்டாள். இங்கு கூறப்படும் சுரூபங்கள் குடும்ப வழிபாட்டு விக்கிரங்களாகும். இவற்றைப் பங்காகப் பெற்றுக்கொண்டவர் சொத்துக்கு உரிமை உடையோராகின்றனர். ராகேல் இவற்றைத் தொழுகைக்காக திருடியிருக்கமாட்டாள். தனது கணவனுக்கு இந்த சொத்துரிமை ஆவணங்கள் பங்காகட்டும் என்றே செய்தாள் என திருமறை அறிஞர்கள் கருதுகின்றனர். தன் கணவர் யாக்கோபை ஆசீர்வதிப்பவரும், தங்கள் குடும்பத்தின் சுதந்திரமாக விளங்குபவரும் யெகோவா என்னும் சர்வ வல்லமையுள்ள கர்த்தர் என்பதை அவள் மறந்துவிட்டாள். அவளது செயலை திருமறை திருட்டு என்று சொல்லுகிறது. அதை லாபான் தேடிவரும்போது அவள் பொய் சொன்னாள். அதை யாரிடத்தில் கண்டுபிடிப்பீரோ, அவளை உயிரோடே வைக்கவேண்டாம் என்று ஒன்றுமறியாத யாக்கோபு லாபானிடம் கூறினான். இதன்மூலம் லாபானுக்கும், யாக்கோபுக்கும் இடையில் மனஸ்தாபம் வந்தது. கடைசியில் ஆசீர்வாதத்திற்குப் பதில் சாபத்தையே ராகேல் பெற்றுக்கொண்டாள்.

3. **இறை ஆசியும் ராகேலின் முடிவும்:**

ராகேலை நேசித்த இறைவன் அவளைக் கடாட்சித்தார். திருமறையில் முதன்முதலில் தீர்க்கதரிசனம் உரைத்தவள் ராகேல். யோசேப்பு பிறந்தபோது இன்னும் ஒரு குமாரனை கர்த்தர் எனக்குத் தருவார் என்று தீர்க்கதரிசனம் கூறினாள். இருப்பினும் சாபவார்த்தைகள் அவள் வாழ்வில் பெலன் பெற்றது. ராகேல் தனது இரண்டாவது மகனைப் பிரசவிக்கும்போது மரித்துவிட்டாள். அது ஒரு பயணத்தின் சமயமாயிருந்தபடியால் யாக்கோபின் குடும்ப கல்லறையில் அவள் சேர்க்கப்பட முடியவில்லை. அவள் பெத்லகேம் என்னும் எப்பிராத்தா ஊருக்குப் போகிற வழியில் அடக்கம் பண்ணப்பட்டாள். அவள் கல்லறையில் யாக்கோபு ஒரு தூணை நிறுத்தினான். இது பல தலைமுறைகளுக்கும் நிலைத்து நின்றது.

பிள்ளையில்லாத ராகேலின் வியாகுலம் பெரிதாயிருந்தது. இயேசுகிறிஸ்து பிறந்தபோது பாலகனாகிய இயேசுவை கொல்ல விரும்பிய ஏரோது ராஜா இஸ்ரவேல் தேசத்தில் இரண்டு வயதிற்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொன்றான். அன்றைய துயர ஒலியையும், எல்லா தாய்மார்களின் புலம்பலையும் குறித்து 600 வருடங்களுக்கு முன்பே எரேமியா தீர்க்கதரிசனம் சொல்லும்போது 'ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது அவைகள் இல்லாதபடியால் ஆறுதல் அடையாதிருக்கிறாள்' என்றார் (எரேமியா 31:5) (மத்தேயு 2:17,18) சரித்திரத்தில் அவள் பெயர் பிள்ளைகளுக்காக அழுத சம்பவத்துடன் கூறப்படுகிறது.

ஆம் அன்பானவர்களே, ராகேல் தன் வாழ்வில் ஆசீர்வாதத்தைவிட சாபத்தையே அதிகம் பெற்றுக்கொண்டாள். ரகேலைப்போல அல்ல, நாம் இறைவனில் முழுமையாய் நம்பிக்கை வைத்து உண்மையாய் வாழ்ந்து, இறை ஆசிகளை சொந்தமாக்கிக் கொள்வோம்.

இறைவனின் நிறைவான ஆசி நம் அனைவரோடும் தங்கி இருப்பதாக. ஆமென்.

**திருமதி. ஜெனிதா சுஜின்,**
ஆயரம்மா.

# திருமறை அறிவுப்போட்டி டிசம்பர் 2023

## யோபு 36-38 அதிகாரங்கள்

**(சரியான விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 24.12.2023)**

1. யார் செய்ய நினைக்கிறதை எது அறிவிக்கும்?
2. எதில் எப்படி வரப்பண்ணுகிறார்?
3. எது எதுபோல் ரூபங்கொள்ளும், எவைகள் எதுபோல் காணப்படும்?
4. எது திருப்தியாகி, எவைகளை முளைக்கப் பண்ணும்?
5. யார் யாருக்கு பயப்படவேண்டும், யாரை யார் மதிக்கமாட்டார்?
6. யார் எதை யாரை விட்டு விலக்காமலும், யாரை எங்கு ஏறவும், எங்கு உட்காரவும் செய்கிறார்?
7. எதை பார்க்கிலும் எதை தெரிந்துகொண்டீர்?
8. யார் எவைகளை எங்கு பெய்ய கட்டளையிடுகிறார்?
9. எது பாடி, யார் கெம்பீரித்தது?
10. எதினால் எப்படி பேசுகிறோம்?

# நவம்பர் 2023 – சரியான விடைகள்

## யோபு 33-35 அதிகாரங்கள்

1. உம்முடைய பாவத்தினால் உம்மைப்போன்ற மனுஷனுக்கு நஷ்டமும், உம்முடைய நீதியினால் மனுபுத்திரனுக்கு லாபமும் உண்டாகும். (யோபு 35:8)
2. ஆகையால் புத்திமான்களே, எனக்குச் செவிகொடுங்கள், அக்கிரமம் தேவனுக்கும், அநீதி சர்வவல்லவருக்கும் தூரமாயிருக்கிறது. (யோபு 34:10)
3. அவன் மாம்சம் காணப்படாதபடிக்கு அழிந்து, மூடப்பட்டிருந்த அவன் எலும்புகள் வெளிப்படுகிறது. (யோபு 33:21)
4. அவருடைய கண்கள் மனுஷருடைய வழிகளை நோக்கியிருக்கிறது, அவர்களுடைய நடைகளையெல்லாம் அவர் பார்க்கிறார். (யோபு 34:21)

5. ஆகையால் யோபு வீணாய்த் தம்முடைய வாயைத் திறந்து, அறிவில்லாமல் வார்த்தைகளை மிகுதியாய் வசனிக்கிறார் என்றான். (யோபு 35:16)

6. வாயானது போஜனத்தை ருசிபார்க்கிறதுபோல, செவியானது வார்த்தைகளைச் சோதித்துப்பார்க்கும். (யோபு 34:3)

7. என் ஆத்துமா படுகுழியில் இறங்காதபடி, அவர் அதை இரட்சிப்பார், ஆகையால் என் பிராணன் வெளிச்சத்தைக் காணும் என்று சொல்லுவான். (யோபு 33:28)

8. தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார், சர்வவல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர்கொடுத்தது. (யோபு 33:4)

9. இதிலே நீர் நீதியுள்ளவர் அல்லவென்று உமக்குப் பிரதியுத்தரமாகச் சொல்லுகிறேன், மனுஷனைப்பார்க்கிலும் தேவன் பெரியவராயிருக்கிறார். (யோபு 33:12)

10. அக்கிரமக்காரர் சொன்ன மறுஉத்தரவுகளினிமித்தம் யோபு முற்றமுடிய சோதிக்கப்படவேண்டியதே என் அபேட்சை. (யோபு 34:36)

## சரியான விடை அனுப்பியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | Mrs. ஆட்லின் ரீனா பிரபு | 10 | Mrs. கிளாட்சிலி பினுகுமார் |
| 2 | Mrs. சபிதா அருண் | 11 | Mr. பிரபாகரன் |
| 3 | Mrs. மினு பெர்மின் | 12 | Mrs. பொம்மி ராஜன் |
| 4 | Mrs. பெனிஷாசிங் | 13 | Mrs. பிரதீபா ராஜேஷ் |
| 5 | Mrs. நித்தியா வின்செண்ட் | 14 | Mrs. ஹேமா ஜெயன் |
| 6 | Mrs. ஷோபா நிரஞ்சன் | 15 | Mrs. சாலினி சுதன் |
| 7 | Mrs. ஜெனி தினகர் | 16 | Mrs. நிஷா ஸ்டாலின் |
| 8 | Mrs. ஆன்லெட் ஜட்சன் | 17 | Mrs. றோஸ்மின் கிருபா |
| 9 | Mrs. ஜாஸ்மின் ஜஸ்டின் | | |

# KIDS STORY TIME

## THE EAGLE AND THE WOODCUTTER

Dear Children,

Greetings to you all in the name of our Lord and Saviour Jesus Christ.

There lived a kind woodcutter in a village. He once freed an eagle from a trap. One day he went to the hills to cut trees for wood. The hill was steep. So the woodcutter could not come down and needed help.

Upset, he sat down on the rock and waited for some help. Suddenly, an eagle flew down close to him and took away his hat. The woodcutter was angry and he started chasing the bird. After some time, he realized he has found the way down the hill.

It then occurred to him that the bird was the same eagle he had once rescued. He now understood why the eagle flew away with his hat. He thanked the eagle for its brilliant idea and said," You took away my hat so that I can follow you and reach here. You are my true friend. Thank you!"

**Moral:** Kindness is always rewarded. We should always help others selflessly.

**God Bless You All!!!**

# INTERESTING INTERNET

## Freaky Facts about the weather

1. A hurricane in Florida, USA, caused 900 captive pythons to escape.
2. Worms wriggle up from underground when a flood is coming.
3. A thunderstorm can produce 160kmph winds!
4. In Antarctica, snow can fall so hard you can’t see your hand in front of your face.
5. A whiteout or heavy snowfall that makes it difficult to see, can make you feel sick.
6. Wildfires sometimes create tornadoes made of fire called fire whirls.
7. In 1972, a blizzard dumped 8m of snowfall on Iran, burying 200 villages.
8. Some tornadoes can be faster than formula one racing cars!
9. Black ice, a transparent coating of ice on a surface, can make pavements super-slippery.
10. Some frogs get noisier just before it rains.
11. In 525 BC a sandstorm buried hundreds of soldiers in an Egyptian desert.
12. Waterspouts, or rotating columns of air over water, can make sea creatures rain down from the sky.

13. The most damage ever caused by a thunderstorm was in 1995, when hailstones bigger than cricket balls fell in Texas, USA.

14. In 1684, it was so cold that the River Thames froze solid for two months.

15. Cats and dogs have been known to sense when a tornado is approaching.

# YOUR ATTENTION PLEASE

**SUN AND LAMP**

2 Peter 1:13-21

**As to a light shining in a dark place.**

2 Peter 1:19

Dear Teenagers,

Greetings to you all in the name of our Lord and Saviour Jesus Christ.

The sunlight is enough for us during the day and therefore we do not need any other light. The sunlight which is so bright in the daytime cannot be conserved and used in the night. We cannot face the night with the sunlight which we enjoyed in the daytime.

Knowledge, reflective power and philosophical outlook are great and luminous like the sunlight. Though they are useful for the humanity they cannot help people in their dark periods.

Sin plunges the human race into darkness. Losses of dfferent kinds, trails, disillusionments and discouragement hurl people into absolute darkness. It is hand for man to find his way in such a darkness using his knowledge and philosophy.

In such a dark situation we need the Word of God, which like a lamp will show the way for us. It is not just the printed matter in the Bible. The words must go into our heart and reverbenate there.

The Word of God becomes alive and vibrant in our heart, when we are intimate with Him. In the encircling darkness, we can easily find our way guided by the light of His Word.

Even though who possess excellent wisdom, struggle hard to find their way in this sinful world, which is shrouded in darkness. Their life is deprived of hope and peace. The Word of God may not sound appealing and attractive like the erudite words of the learned.

Scholars with their infinite wisdom may not regard and venenate the Word of God. But, it is true that philosophy cannot offer the hope and encouragement, which one will surely find in the Bible.

**To Ponder**

The world applauds our knowledge of the Bible, but God commands our obedience to His Word.

**God Bless You All!!!**

# SHARJAH TAMIL CONGREGATION

(CSI KANYAKUMARI DIOCESE)

# MERRY CHRISTMAS

May all the sweet magic of Christmas
conspire to gladden your hearts
and fill every desire

# SHARJAH TAMIL CONGREGATION
(CSI KANYAKUMARI DIOCESE)




May this year be full
of hope in our eyes and
love in our hearts.

Wish you and your family a very

happy
NEW YEAR

# இறை பிரசன்னத்தில் !

***நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார். (மத்தேயு 21:22)***

- போரினால் பாதிக்கப்படுகிற நாடுகளில் அமைதி நிலவிட
- ஊழியங்கள் அனைத்து இடங்களிலும் தடையில்லாமல் நடைபெற
- உலகத் திருச்சபைகளுக்காகவும், இந்திய திருச்சபைகளுக்காகவும்
- தென்னிந்திய திருச்சபை, முதன்மை பேராயர், பேராயர்கள், ஆயர்கள், திருப்பணிவிடையாளர்கள், இறைமக்களுக்காகவும்
- நமது திருச்சபைக்காகவும், திருப்பணிகள், அனைத்து குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும்
- அனைத்து நாடுகளுக்காகவும், அதன் தலைவர்களுக்காகவும்
- இந்திய தேசத்திற்காகவும், நாம் வாழும் UAE தேசத்திற்காகவும், தலைவர்களுக்காகவும்
- ஆட்சியாளர்கள் தங்கள் கடமைகளை மக்கள் நலனுக்காய் செய்ய
- அனுதினம் பயணம் செய்வோரின் பயண பாதுகாப்பிற்காக
- லஞ்சம், ஊழல் செய்வோர் மனம் மாற
- கல்வி பயிலும் அனைத்து பிள்ளைகளுக்காக
- விடுதிகளில் தங்கி பயிலும் பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக
- மேல் படிப்பிற்காக ஆயத்தப்படுவோருக்காக
- வாலிபர்களுக்காகவும், அவர்களின் வேலைவாய்ப்பு, திருமணத்திற்காகவும்
- வயதான பெற்றோர்களின் பாதுகாப்பிற்காகவும்
- வியாதியினால் பாதிக்கப்படுவோர் சுகம் பெற
- கடன், வறுமை, குடும்ப பிரச்சனைகளினால் அல்லலுறுவோர் விடுதலை பெற
- மனநிலை பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்விற்காக
- கைம்பெண்கள், ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளிகள் வாழ்வுக்காக
- வேலைத் தேடுவோர் வேலை வாய்ப்பு பெற
- மதுபானம், போதை பொருட்களுக்கு அடிமைப்பட்டிருப்போர் வாழ்வு பெற
- தனிநபர் உறைவிடங்களில் வாழும் ஒவ்வொரு நண்பர்களுக்காக
- இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படவும், இயற்கைச் சீற்றங்கள் தடுக்கப்படவும்
- கிறிஸ்து பிறப்பு பண்டிகை அனைவருக்கும் ஆசீர்வாதமாய் அமைய

# தெரிந்து கொள்ளுங்கள் !

## இயேசு தருகிற ஆசீர்வாதங்கள்

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1 யோவான் 1:9**

நாம் பாவிகளாயிருந்தாலும் இயேசு நமக்காக மரித்ததினால் மிகுந்த ஆசீர்வாதங்களை அனுபவிக்கமுடியும். தேவன் தந்த இந்த மாபெரும் பரிசு நமக்கு இப்போதும் எதிர்காலத்திலும் நன்மைகளை அளிக்கிறது. அவற்றில் சிலவற்றைச் சிந்திக்கலாம்.

1. **பாவங்களுக்கான மன்னிப்பு:** பாவத்தின் காரணமாக சரியானதைச் செய்ய நாம் அதிகமாகவே போராட வேண்டியிருக்கிறது. சொல்லிலும் செயலிலும் நாம் அனைவருமே பாவம் செய்கிறோம். ஆனால் இயேசு நம்மை மீட்டதினால் நம்முடைய பாவங்களுக்கான மன்னிப்பை நாம் பெற்றுக்கொள்ளமுடியும். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது (கொலோ. 1:14). நாம் தாழ்மையோடு மன்றாடி இயேசுவின் இரத்தத்தின்மேல் விசுவாசம் வைத்து மன்னிப்பு கேட்கவேண்டும்.

2. **தேவனுக்குமுன் சுத்தமான மனச்சாட்சி:** குற்றமுள்ள மனச்சாட்சி நமக்குள் குறுகுறுத்துக்கொண்டே இருந்தால் வெகுசீக்கிரத்தில் நம்பிக்கையை இழந்து விடுவோம். அதுமட்டுமல்ல, எதற்கும் உபயோகமில்லாதவன் என நம்மை நாமே நினைக்கவேண்டிய நிலை வந்துவிடும். ஆதனால் இயேசு நமக்காக தன்னையே பலியிட்டு, மன்னிப்பை வழங்கி, பாவத்தின் மத்தியில் சுத்தமான மனச்சாட்சியுடன் தேவனை வணங்குவதற்கும், தைரியமாக தேவனை அணுகவும் வழிசெய்து கொடுத்திருக்கிறார். சுத்தமான மனச்சாட்சி மனநிம்மதியை அளிக்கிறது. சுயகௌரவத்தை அதிகரிக்கிறது. சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

3. **நித்தியமாக வாழும் நம்பிக்கை:** பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன் (ரோமர் 6:23). பூரண ஆரோக்கியத்துடன் நிம்மதியாக வாழும் ஆசீர்வாதங்களும், எதிர்காலத்தில் கிடைக்கும் மற்றெல்லா ஆசீர்வாதங்களும் இயேசு நமக்காக மரித்ததால்தான் சாத்தியமாகி இருக்கின்றன.

   இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார், அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. (வெளிப். 21:3,4).

**இந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள உதவிசெய்த இயேசுவுக்கு நன்றி செலுத்தவேண்டும்.**

# சிறுவர் பகுதி...

# COLOUR THE PICTURE



# CHILDREN'S QUIZ CORNER

## (Song of Songs: Chapter 5-8)

1. How did her beloved rank ?
   a. The mightiest of the mighty
   b. The most Valiant
   c. The distinguished among ten thousand
   d. The Prince
2. Your head crowns you like __________
   a. Damascus
   b. Carmel
   c. Lebanon
   d. Heshbon
3. Appearance of the beloved is like __________
   a. Damascus
   b. Carmel
   c. Lebanon
   d. Heshbon
4. What was laid up for the beloved ?
   a. All manner of pleasant fruits, new and old
   b. Gold
   c. Silver
   d. All of the above
5. How did she describe her beloved ?
   a. Altogether desirable
   b. The lion of Judah
   c. Altogether wonderful
   d. None of the above
6. What did she claim about her beloved ?
   a. He brings me joy and happiness
   b. He would be with her forever
   c. He would shower her with love
   d. I am my beloved's and my beloved is mine

7. What is cruel as the grave ?
   a. Adultery
   b. Envy
   c. Hatred
   d. None of the above
8. Under the __________ tree, I awakend you
   a. Fig
   b. Cedar
   c. Apple
   d. Olive
9. There are __________ queens and __________ concubines
   a. 80, 60
   b. 60, 80
   c. 50, 60
   d. 80, 50
10. What cannot quench love ?
   a. Cold weather
   b. Distance
   c. Many Waters
   d. Rumors

## Children's Quiz Corner – November 2023 Answers

**Song of Songs Chapter : 1-4**

| | |
|---|---|
| 1 | a) Black [ 1:5,6] |
| 2 | c) Lebanon [4:11] |
| 3 | c) The singing of bonds [2:12] |
| 4 | d) bo valiant men [3:7-8] |
| 5 | b) Dove's eyes [1:15] |
| 6 | d) None the above. [ 2:9,17] |
| 7 | d) Cedar [ 1:17] |
| 8 | b) Little foxes [2:15] |
| 9 | d) Flaw [4:7] |
| 10 | c) He whom her soul loved [3:1-4] |

## சிறுவர் பகுதி போட்டியில் பங்கேற்றோர்

### Childrens Quiz Corner

| | | | |
|---|---|---|---|
| 1 | Fabina Jills | 11 | R.P. Remiro |
| 2 | Nirmlyn Fiona | 12 | J. Juana Jeyan |
| 3 | Sharon Sathya | 13 | Aashi B Buena |
| 4 | Akshal Hans | 14 | Jovan Fedrick |
| 5 | Jesuna | 15 | Ferona Katie |
| 6 | J.J. Jafflin | | |
| 7 | J.J. Jeffin | | |
| 8 | S. Johan Sujin | | |
| 9 | J.A. Johan Judson | | |
| 10 | Bertina Stalin | | |

### Coloring

| | | | |
|---|---|---|---|
| 1 | Bertina | 10 | R.P. Samual Raj |
| 2 | Dallan Bryant | 11 | S. Joshan |
| 3 | Shalom Sathya | 12 | Evalina Jeyan |
| 4 | Sharolin Sathya | 13 | Aafreen B. Baron |
| 5 | Steve Adrian V. N | 14 | Chris Bermin |
| 6 | Timothy Bermin | 15 | Bertina Stalin |
| 7 | Jenufiyaa | 16 | J.A. Jaran |
| 8 | R.P. Remijo | | |
| 9 | R.P. Evalyn Reeba | | |

# கிறிஸ்தவ கீர்த்தனைக் கவிஞர்கள்

## ஆபிரகாம் பண்டிதர் (1859-1919)

தமிழிசை இயக்கத்தின் தந்தையாகப் போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் 1859-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாம் நாள், முத்துசாமி நாடாருக்கும், அன்னம்மாள் அம்மையாருக்கும் திருநெல்வேலி மாவட்டம் தென்காசியின் அருகில் உள்ள சாம்பவர் வடகரை என்னும் ஊரில் பிறந்தார். முத்துசாமி நாடாரின் தந்தையார் சுப்பிரமணிய நாடாருக்கு பதிமூன்று குழந்தைகள். காலரா நோயினால் பதினொரு குழந்தைகள் இறந்துவிட்டன. ஓர் ஆணும், ஓர் பெண்ணும் உயிர் தப்பினர். அந்த ஆண் குழந்தையின் பெயர் முத்துசாமி நாடார் என்பதாகும். இத்துயர நிகழ்ச்சியினால் மனமுடைந்த சுப்பிரமணிய நாடாருக்கு இயேசுகிறிஸ்துவைப் பற்றிய நற்செய்திகளுடன் கூடிய ஆசீர்வாதம் ஆறுதலாக இருந்தது. இயேசுகிறிஸ்துவின் வாழ்வும், மீட்பின் செய்தியும் சுப்பிரமணியத்தின் உள்ளத்தில் மாறுதலை ஏற்படுத்தியதால் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தார்.

**கல்வி:**

இவரது மகன் முத்துசாமி நாடார், சாம்பவர் வடகரையை விட்டு அருகிலுள்ள பங்களாச் சுரண்டைக்கு வந்து குடியேறினார். அங்குள்ள ஆங்கிலப் பாதிரியாரிடம் தோட்டக்காரராக வேலை செய்து வந்தார். இவரது மனைவி அன்னம்மாள் ஆலயப்பணி செய்வதும், சிறுவர்களுக்கு வேதபாடம் கற்றுக் கொடுத்தும் வந்தார். முத்துசாமி நாடார், தன் மகன் ஆபிரகாமை ஆரம்பக்கல்வி கற்க சுரண்டைக்கு அனுப்பினார். சுரண்டையின் அருகிலுள்ள பன்றிகுளம் என்னும் ஊரிலுள்ள உயர்தர ஆரம்பப் பள்ளியில் 1868 முதல் 1870 வரை அவர் கல்வி பயின்றார். பின்னர் சுரண்டையிலுள்ள தமது உறவினரின் தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1874-ம் ஆண்டு ஆபிரகாம் திண்டுக்கல்லில் உள்ள நார்மல் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து ஆசிரியப் பயிற்சி பெற்றார். தம் சொந்த ஊரிலிருந்து திண்டுக்கல்லுக்கு கால்நடையாகவே வந்து சேர்ந்தார். அப்பள்ளியின் தலைவர் அருள்திரு.யார்க் (Rev.York) ஆபிரகாமின் அறிவாற்றலை உணர்ந்து தமது மாதிரிப் பள்ளியில் ஆசிரியராக நியமித்தார். அருள்திரு.யார்க் புகைப்படம் எடுப்பதில் வல்லவர். அக்கலையை ஆபிரகாமுக்குத் தெளிவாகக் கற்றுக் கொடுத்தார். இதனால் இளமைப் பருவத்திலேயே புகைப்பட கலையின்

நுட்பத்தை ஆபிரகாம் கற்றுக் கொண்டார். மேலும் இரவு நேரங்களில் சித்த வைத்தியம பற்றிய நூல்களையும், சுவடிகளையும் படித்து வந்தார்.

**இசை ஆர்வம்:**

ஆபிரகாம் சிறுவயதிலேயே இசையிலும் மிக விருப்பம் உடையவராக விளங்கியதுடன் பாடல்களை இயற்றி பாடும் வரமும் பெற்றிருந்தார். இசைக்கலையை முழுமையாகப் படிக்கவேண்டும் என்னும் ஆர்வத்தால் திண்டுக்கல்லிலுள்ள இசை வல்லுநரான வித்வான் சடையாண்டிப் பக்தரிடம் கற்றார். 1879-ம் ஆண்டு அருள்திரு.யார்க் அவர்களும் அவரது மனைவியும் இங்கிலாந்து நாட்டிற்கு பயணமாகிறபோது அத்தம்பதியினர் மீது பாடல்கள் இயற்றி இசையமைத்துப் பாடினார். மாணவர்களுக்கும் பயிற்சி கொடுத்து பாடவைத்தார். இதனால் மகிழ்ச்சியடைந்த தம்பதியினர் ஆபிரகாமுக்கு வயலின் இசைக்கருவியை அன்பளிப்பாக் கொடுத்துச் சென்றனர்.

**திருமணம்:**

ஆபிரகாம் அவர்கள் 1882-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ம் நாள் திருநெல்வேலி வடக்கேயுள்ள நாஞ்சான்குளம் என்னும் ஊரிலுள்ள வேதக்கண் நாடாரின் மகள் ஞானவடிவு பொன்னம்மாளை திருமணம் செய்தார். அவ்வம்மையாரும் ஆசிரியர் பயிற்சி பெற்றிருந்தார். திண்டுக்கல்லில் பணியாற்றி வரும்போது உடன் பணிபுரிந்த ஞானமுத்துவின் அழைப்பினை ஏற்றுக்கொண்டு ஆபிரகாம் தம்பதியினர் தஞ்சாவூர் சென்றனர்.

**ஆசிரியப்பணி:**

தஞ்சாவூரிலிருந்த அருள்திரு.டபிள்யூ எச். பிளேக் என்பவர், சீமாட்டி நேப்பியர் பெண் பாடசாலையில் ஞானவடிவு பொன்னம்மாள் அம்மையாரைத் தலைமை ஆசிரியையாகவும், ஆபிரகாமைத் தமிழ் ஆசிரியராகவும் நியமித்தார். இருவரும் இப்பள்ளியில் ஆறு ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றினர். 1890-ல் பிளேக் அவர்கள் தன் சொந்த நாடான இங்கிலாந்திற்குத் திரும்பிச் சென்றவுடன் ஆசிரியப்பணியை ஆபிரகாம் தம்பதியினர் விட்டுவிட்டு மருத்துவத்துறையில் முழுக்கவனம் செலுத்தினர்.

1898-ல் இந்தியாவின் பல இடங்களில் குறிப்பாக கோயம்புத்தூர், மைசூர் போன்ற இடங்களில் பிளேக் என்னும் கொடிய தொற்றுநோய் பரவியது. இதனால் பலர் இறந்தனர். கருணானந்தரின் அறிவுரைப்படி செந்தூரச் சஞ்சீவி மாத்திரைகளும், பிற மருந்துகளும் தயாரித்து குறைந்த விலையில் விற்றார். இதனால் மக்கள் சுகம் பெற்றனர். ஆபிரகாமுக்கு மிகுந்த செல்வமும், நற்பெயரும் கிடைத்தன. இந்தியா மட்டுமின்றி இலங்கை போன்ற அண்டை

நாடுகளிலும் இவரது மருந்துகள் விற்பனையாயின. இம்மருந்துகள் விற்றதால் கிடைத்த பணத்தைத் தன் குருநாதரான கருணானந்தருக்கு காணிக்கையாகப் படைத்தார். குருநாதர் சிரித்துக்கொண்டு ‘துறவிக்குப் பணம் எதற்கு’ என மறுத்துவிட்டார். பின்னர் ஆபிரகாமைப் பார்த்து, ‘மகனே! தென்னகத்தில் தமிழிசை மறைந்து வருகிறது. அதனை வளர்ப்பாயாக என்றார்’. அன்றிலிருந்து இசையறிவை வளர்த்ததுக்கொள்ள முழுமையாக உழைத்தார்.

**குடும்பம்:**

ஆபிரகாம் - ஞானவடிவு பொன்னம்மாள் தம்பதியினருக்கு அன்னபூர்ணவல்லி, சௌந்தரவல்லி, சுந்தரபாண்டியன், ஆனந்தவல்லி, ஜோதிபாண்டியன், மரகதவல்லி என இரண்டு ஆண்களும், நான்கு பெண்களுமாக மொத்தம் ஆறு குழந்தைகள். 1911 டிசம்பர் 15-ம் நாள் ஞானவடிவு பொன்னம்மாள் காலமானாள். அவருடைய உடல் கருணானந்தபுரம் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

பின்னர் ஆபிரகாம், கோயில்பாக்கியம் அம்மாளை இரண்டாம் தாரமாக மணந்து கொண்டார். இத்தம்பதியினருக்கு வரகுணபாண்டியன், சௌந்திரபாண்டியன், கனகவல்லி, மங்களவல்லி என்னும் மக்கள் நால்வர் பிறந்தனர். கோயில்பாக்கியம் அம்மாள் ஆபிரகாமின் இசை ஆராய்ச்சியில் உறுதுணையாக செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கீர்த்தனைகள்:**

கருணாமிர்த சாகரத் திரட்டு எனும் நூலில்ஆபிரகாம் பண்டிதர் எழுதியுள்ள 96 பாடல்கள் உள்ளன. பல்வேறு கீர்த்தனைகளை எழுதியிருப்பினும் சான்றாகக் கீழ்க்காணும் கீர்த்தனைகள் தரப்படுகின்றன. ஆவை

1. கண்டேன் என் கண் குளிர கர்த்தனையின்று
2. மங்களம் செழிக்க கிருபையருளும் மங்கள நாதனே
3. ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்தம் மிகவே
4. உன்னையே நம்பினேன் நான்தானே
5. காக்கும் வழி உனக்கில்லையா
6. இல்லான் என்றனுக்கு என்றும் நிறைவாய்

என்பனவாகும். இவற்றில் முதல் மூன்று பாடல்களும் கிறிஸ்தவக் கீர்த்தனை நூலில் இடம் பெற்றுள்ளன.

ராவ்சாகிப் பட்டம் பெற்ற ஆபிரகாம் பண்டிதர் 1919-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் நாள் காலமானார்.

# மருத்துவப்பகுதி

**பனிக்கால நோய்கள் - பயம் வேண்டாம்!**

காலையில் கண் விழிக்கும்போது கொட்டும் பனியும் கடுங்குளிரும் நம்மை அச்சுறுத்துகிறது. பனிப்பருவத்தில் வளிமண்டலத்தில் வெயில் குறைவாகவும், ஈரப்பதம் அதிகமாகவும் இருப்பதால், நோய்க் கிருமிகளுக்குக் கொண்டாட்டம் கூடிவிடுகிறது. அதனால் நமக்கு பல நோய்கள் வரிசைகட்டி வருகின்றன. அதிலும் இந்தப் பருவத்தில் பெரியவர்களை விட குழந்தைகளுக்குத்தான் நோய்களின் தாக்கம் அதிகமாக இருக்கும். குறிப்பாக, சுவாச மண்டல நோய்கள் அதிகம் பாதிக்கும்.

**சளியும் தொண்டை வலியும்**

பனிக்காலத்தில் வைரஸ் கிருமிகளின் ஆதிக்கம் அதிகம் என்பதால் பலருக்கும் சளியும் தொண்டை வலியும் படுத்தி எடுக்கும். சளி உள்ளவர்கள் தும்மினாலோ இருமினாலோ அருகில் உள்ளவர்களுக்கும் வைரஸ் கிருமிகள் பரவிவிடும். குறிப்பாக, நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்கள் இந்தக் கிருமிகள் கலந்த அசுத்தக் காற்றைச் சுவாசித்தால் அவர்களுக்கும் சளிப் பிரச்சினை வருவது உறுதி.

அதுபோல் சளிப் பிரச்சினை உள்ளவர்கள் பயன்படுத்திய பொருள்களை அடுத்தவர்கள் பயன்படுத்தினாலும் இது வருவதுண்டு. சளிப் பிரச்சினைக்கென தனிச் சிகிச்சை எதுவுமில்லை. இது ஒரு வாரத்தில் தானாகவே சரியாகிவிடும். உடல் வலிக்கும் காய்ச்சலுக்கும் பாராசிட்டமால் மாத்திரை சாப்பிடலாம். மூக்கடைப்பு மற்றும் மூக்கு நீர் ஒழுகலைக் குறைக்க மாத்திரை உண்டு. இளம் வெந்நீரில் குளிப்பது, நீராவி பிடிப்பது, உப்பு நீரில் தொண்டையைக் கொப்பளிப்பது, கைகால் முகத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வது போன்ற வீட்டுப் பக்குவங்களும் உதவும்.

**சளி பிடிப்பது எப்படி?**

பனிக் காலத்தில் குளிர்ந்த காற்றைச் சுவாசிக்கும் போது சளியோடு, தும்மல், மூக்கடைப்பு போன்றவையும் ஏற்படும். அப்போது வாய் வழியாக சுவாசிக்க நேரிடும். இதனால், மூச்சுக் குழாய்க்குள் எந்தக்

கிருமியும் எளிதில் நுழைந்து விடும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்திருந்தால், பாக்டீரியா மற்றும் வைரஸ் தொற்று ஏற்படும். இதனால் நுரையீரல் பாதிக்கப்படும். மூச்சுக் குழாய்க்குள் அழற்சி உண்டாகும். அங்கு நீர் கோத்து சளி பிடிக்கும். பிறகு காய்ச்சல், இருமல் வரும். இதற்கு 'மூச்சுக் குழாய் அழற்சி' என்று பெயர்.

பொதுவாக இந்தத் தொந்தரவு ஒரு வாரம் வரை நீடிக்கும். இது சாதாரண தொந்தரவுதான். அதிக ஆபத்து வராது. பாதிக்கப்பட்டவர்கள் அடிக்கடி இளம் சூடான தண்ணீர் குடிக்க வேண்டும்.

சத்துள்ள உணவுகளை வெதுவெதுப்பாகச் சாப்பிட வேண்டும். இவற்றுடன் சிகிச்சையையும் பெற்றுவிட்டால் நோய் சீக்கிரத்தில் குணமாகி விடும்.

**ஆஸ்துமா**

ஆஸ்துமாவைத் தூண்டக்கூடிய காரணங்கள் ஆளுக்கு ஆள் வேறுபடும். என்றாலும், பனிக் காலத்தில் உண்டாகும் குளிர்ந்த காற்று ஆஸ்து மாவைச் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கும். ஐஸ்கிரீம், குளிர்பானங்கள், ரோஸ்மில்க், சாக்லேட், கேக் போன்ற குளிர்ச்சியான உணவுப் பொருள்களை அடிக்கடி சாப்பிடுவது, ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை போன்ற புளிப்பான பழங்களைச் சாப்பிடுவது, புகை போடுதல் போன்ற பழக்க வழக்கங்கள் ஆஸ்துமாவை அதிகரிக்கச் செய்யும்.

பனிக்காலத்தில் காற்றோட்டம் இல்லாத சூழல் உண்டாகும்போது ஒட்டடைத் தூசு உள்ளிட்ட வீட்டுத் தூசுகள் வெளியேற வழியில்லாமல் அறைக்குள் சுற்றிக்கொண்டிருக்கும். அதனால் ஆஸ்துமா வரும். அதிகாலையில் ஆஸ்துமா வருவதற்கு பூக்களின் மகரந்தம், பார்த்தீனியம் செடி, வளர்ப்புப் பிராணிகளின் ரோமம் போன்றவை காரணமாக இருக்கும்.

ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்த இப்போது இன்ஹேலர், ரோட்டாஹேலர், நெபுலைசர், நேசல் ஸ்பிரே என பல உள்ளிழுப்புக் கருவிகள் உள்ளன. இவற்றின் உதவியுடன் பாதுகாப்பான மருந்துகளை எடுத்துக்கொண்டு ஆஸ்துமாவை சீக்கிரத்தில் கட்டுப்படுத்த முடியும்.

**தோல் வறட்சி**

பனிக் காலத்தில் மூக்கடைப்பு நீடித்தால் தொண்டைக்கும் காதுக்கும் இடையில் உள்ள ‘காது-தொண்டை இணைப்புக் குழாய்’ அடை பட்டு காதுவலி ஏற்படும். இந்த வலி இரவு நேரத்தில்தான் அதிக தொல்லை தரும். சமயங்களில், சைனஸ் தொந்தரவும் இதனுடன் சேர்ந்து கொள்ளும். அப்போது தலைவலி கடுமையாகும்.

பனிக்காலத்தில் கை, கால்களில் தோல் வறட்சி அடையும். அதில் விரிசல்கள் விழும். அந்த இடங்களில் அரிப்பு உண்டாகும். அப்போது தோலை ஈரப்படுத்தும் களிம்புகளை பகலிலும் இரவிலும் கை, கால்களில் பூசிக்கொண்டால் இந்தப் பிரச்சினை தீரும். தேங்காய் எண்ணெய் அல்லது ஆலிவ் எண்ணெய்யும் உதவும். கடுமையான பனியின்போது கை, கால் விரல்கள் இழுத்துக் கொள்ளும். அவை வெள்ளை நிறத்துக்கு மாறி விறுவிறுப்பாகிவிடும். ஊசி குத்தும் வலிகூட ஏற்படும். இதைத் தடுக்க நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். கை, கால்களுக்கு உறை போட்டுக்கொள்ள வேண்டும். புகை பிடிக்கக்கூடாது. காபி அதிகம் குடிக்கக்கூடாது. தங்கும் அறையை வெதுவெதுப்பாக்கிக் கொண்டாலும் நல்லது.

**எப்படித் தடுக்கலாம்?**

அதிகாலை பனியில் வெளியில் செல்லக் கூடாது. செல்ல நேர்ந்தால், காதை மறைக்கின்ற அளவுக்குக் ‘குல்லா’ அணிந்து கொள்ள வேண்டும். குழந்தைகளை வெளியில் அழைத்துச் செல்லும்போது ஸ்வெட்டர், சாக்ஸ் அணிவித்துக் கொள்ள வேண்டும். பச்சிளம் குழந்தைகளுக்குக் கை, கால்களிலும் மெல்லிய பருத்தித்துணி உறைகளை அணிவித்துக்கொள்ளலாம். வெது வெதுப்பான தண்ணீரில் குளிக்க வேண்டும்.

குழந்தைகள் அதிகம் விரும்பும் ஐஸ்க்ரீம், குளிர்பானங்கள், குளிர்ச்சியான உணவுகள் பனிக் காலத்துக்கு ஆகாது. அதுபோல் துரித உணவுகளை ஓரங்கட்டிவிட்டு நம் பாரம்பரிய வீட்டு உணவுகளை இளஞ்சூட்டில் உண்ண வேண்டும். ஒவ்வாமை உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

வீட்டில் ஈரம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சுத்தமான சூழல் அவசியம். பகலில் வீட்டில் ஜன்னல், கதவுகளைத் திறந்து வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் வீட்டிலுள்ள கிருமிகள் வெளியேற வழி கிடைக்கும். கொசுவலை, கொசுவிரட்டிகள் கொண்டு

கொசுக்கடியிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும். குளிரூட்டிகள் வேண்டாம்.

**என்ன சாப்பிடலாம்**

பனிக்கால நோய்கள் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக உள்ளவர்களுக்குத்தான் அதிக பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு உடற்பயிற்சிகள் உதவும். அதிகாலைப் பனியில் நடைப்பயிற்சி மேற் கொள்ள முடியாதவர்கள் மூச்சுப் பயிற்சிகள் மற்றும் யோகாசனப் பயிற்சிகளைச் செய்ய வேண்டும்.

இந்தப் பயிற்சிகள் சுவாச மண்டலத்தை வலுப்படுத்தும். நல்ல ஓய்வும் தேவை. தினமும் குறைந்தது 6 மணி நேரம் தூக்கம் அவசியம். கிரீன் டீ, மூலிகை டீ நல்லது. முளைகட்டிய பயறுகள், நார்ச்சத்து நிறைந்த பழங்கள், கீரைகள் போன்றவற்றைச் சாப்பிட வேண்டும். முக்கியமாக, கேரட், முட்டைக்கோஸ், காலிபிளவர், புரோக்கோலி, பூசணி, வெள்ளைப்பூண்டு, தேன், அன்னாசி, பப்பாளி, மாதுளை ஆகியவை பனிக்கால நோய்களைத் தடுக்கும் அளவுக்கு உடலுக்கு ஆற்றலைக் கொடுக்கும்.

**திருமதி. சபிதா அருண்குமார்**

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

***கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயதுபோலாகிறது*** (சங்.103:5)

| Sl.No | Name | Date of Birth |
|---|---|---|
| 1 | Mrs. R. Blessie Mary, W/o. Mr. Ruskin Swamydhas | 2 |
| 2 | Mrs. Rajasree Sharon, W/o. Mr. John Solomon | 2 |
| 3 | Master. P. Carlin Jonathan, S/o. Mr. Princely Chella Singh | 3 |
| 4 | Mrs. Victoria Praislee, W/o. Mr. Bala Prakash | 3 |
| 5 | Ms. Aashi B. Beuna, D/o. Mr. Binu Kumar | 4 |
| 6 | Mrs. Hema, W/o. Mr. J. Justin | 6 |
| 7 | Mrs. Sunitha, W/o. Mr. T. Jegan Singh | 8 |

| | | |
|---|---|---|
| 8 | Ms. I. Jonalin Chrisho, D/o. Mr. S. Isaac Selvin | 10 |
| 9 | Mr. J. Perkin Rollo, S/o. Mr. Joseph Rollo | 11 |
| 10 | R. Cimi, D/o. Mr. Russel Raj | 11 |
| 11 | Mr. C. Stalin Kumar | 15 |
| 12 | Mr. Nibish | 20 |
| 13 | J. Riyana Joan, D/o. Mr. Josin | 23 |
| 14 | Mr. S. Darwin Dhinahar | 27 |
| 15 | C. Jaffrin Hannah, D/o. Mr. Chandra Jose | 27 |

# திருமணநாள் வாழ்த்துக்கள்

*வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே*
*நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் (சங்.115:15)*

| Sl.No | Name | Wedding Day |
|---|---|---|
| 1 | Mrs. & Mr. Somu. K Suji | 5 |
| 2 | Mrs. & Mr. Dancer Kemy Vanaja | 13 |
| 3 | Mrs. & Mr. Austin Jose S Suja | 20 |
| 4 | Mrs.& Mr. Satheesh Anila | 23 |
| 5 | Mrs. & Mr. J. Melwin Devis Shermily | 26 |
| 6 | Mrs. & Mr. I. Isaac Selvin Celin | 26 |
| 7 | Mrs. & Mr. C. Bright David Vijila | 27 |
| 8 | Mrs. & Mr. Chandra Jose Divya | 27 |
| 9 | Mrs. & Mr. Dr. D. Raja Suthahar Punitha | 29 |
| 10 | Mrs. & Mr. Princely Chella Singh S Catherin | 30 |
| 11 | Mrs. & Mr. K. Arunkumar Sabitha | 31 |




**SHARJAH TAMIL CONGREGATION** (CSI KANYAKUMARI DIOCESE)

P.O. BOX : 36378, Sharjah, U.A.E. TEL. : 06-5680727, Mobile : 050-936 7576